# ஆடிப்பட்ட கத்திரி மற்றும் வெண்டை விலை முன்னறிவிப்பு

## கத்திரி

வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் முன் கூட்டு மதிப்பின் படி, கத்திரி சாகுபடி 2015-16 ஆம் ஆண்டு இந்தியாவில் 6.70 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு, 127.79 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த நிலப்பரப்பில், காய்கறிப்பயிர் மட்டும் 94.65 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 1685.05 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் மொத்த காய்கறி உற்பத்தி பரப்பளவில், கத்திரி மட்டும் 7.07 சதவீதம் பயிரிடப்படுகிறது. மேற்கு வங்காளம், குஜராத், நாகலாந்து, சத்தீஸ்கர், மற்றும் பீகார் ஆகியவை கத்திரி பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். கத்திரி சாகுபடியில், தமிழ்நாட்டின் பங்கு குறைந்த அளவில் காணப்படுகிறது.

தமிழகத்தில், தென்மேற்கு பருவ மழையை நம்பி கத்திரி மானாவாரி பயிராக பயிரிட்பபடுகிறது. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் கூற்றுப்படி 2014-2015 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் கத்திரி சாகுபடி 0.11 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 1.05 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. திண்டுக்கல், கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், தேனி, புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் கத்திரி அதிகளவில் பயிரிடப்படுகிறது. வறட்சியின் காரணமாக கத்திரியின் வரத்து குறைவாக உள்ளது. கத்திரியின் முக்கிய இரகங்களான கோ1, கோ2 மற்றும் கோபிஹெச்1 பயிரிடப்படுகிறது. அடர்ந்த ஊதா நிறம் மற்றும் பளபளப்பாக இருக்கும் இரகங்களையே கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் அதிகம் விரும்புகின்றன.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், கோயம்புத்தூரில் ஆடிப்பட்டத்தில் பயிரிடும் கத்திரியின் பண்ணை விலை அறுவடை சமயத்தில் (ஆகஸ்ட்- செப்டம்பர்) கிலோவிற்கு ரூ. 22 முதல் 25 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## வெண்டை

வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் முன் கூட்டு மதிப்பின் படி, 2015-16 ஆம் ஆண்டில், இந்தியாவில், வெண்டை சாகுபடி 5.04 இலட்சம் எக்டர் நிலப்பரப்பளவில் பயிரிடப்பட்டு, 57.94 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் அதிகளவில் வெண்டை பயிரிடப்படும் மாநிலமாக மேற்கு வங்காளம் (8.82 இலட்சம் டன் உற்பத்தி) முன்னிலை வகிக்கின்றது. அதை தொடர்ந்து குஜராத், ஆந்திர பிரதேசம், பீகார் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் வெண்டை உற்பத்தியில் முக்கிய பங்கு வகுக்கிறது. தமிழகத்தில் 2014-15-ல் வெண்டை சாகுடி, 0.08 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 0.56 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. திண்டுக்கல், கோயம்புத்தூர், சேலம், வேலூர், காஞ்சிபுரம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் வெண்டை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றது. வெண்டையின் முக்கிய இரங்களான கோ 1, கோ 2 மற்றும் கோபிஹெச் ஹெச் 1 அதிகளவில் பயிரிடப்படுகிறது. வறட்சியின் காரணமாக ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் சந்தையில் வெண்டையின் வரத்து சென்ற பருவத்தை விட சற்று குறைவாக உள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் நடவு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 13 ஆண்டுகளாக ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் உழவர்சந்தைகளில் நிலவிய வெண்டை விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. இதன் அடிப்படையில், அறுவடை சமயத்தில், அதாவது ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் வெண்டையின் பண்ணை விலையானது கிலோவிற்கு ரூ. 23 முதல் 25 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைப்படி, நடவு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641 003

தொலைபேசி - 0422-2431405

**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்

காய்கறிப் பயிர்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி எண் - 0422-6611374, 0422- 6611283